**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.382/2020 பி.வா.சா.1 மாலதி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 20.04.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

4) வழக்கு பரிகாரங்கள் பற்றி தெரிந்து தான் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெறும் போது எனக்கும் வாதிகளுக்கும் மனவேறுபாடு இல்லை என்றால் சரிதான். நான் வாதிகளை நேரில் சந்தித்து தட விவரங்களை கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நானும் வாதிகளும் என் கணவரும் ஒரே கிராமத்தினர் என்றால் சரிதான். நான் பூமியை அளந்து கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் அளவீடு செய்ததாக சொல்லும் சமயத்தில் வாதிகள் தரப்பில் எவரேனும் இருந்தனரா என்றால் நான் அன்று செல்லவில்லை. என் கணவர் தான் சென்றார். நான் பூமியை அளக்கவே இல்லை என்றால் சரியல்ல.

5) 1ம் பிரதிவாதியின் தந்தைக்கும் வாதிகளின் தந்தைக்கும் இடையிலான வா.சா.ஆ. 1 பாக சாசனத்தை நான் படித்து உள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 பாக சாசனத்தில் வாதிகளின் தந்தைக்கு நான் கிரையம் பெற்ற பூமியில் 10 லிங்ஸ் தடம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தடம் அச்சமயத்தில் ஆள், வண்டி , கால்நடை கொண்டு செல்வதற்கு என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். லாரி முதலிய கனரக வாகனங்கள் மேற்படி தடத்தில் செல்ல இயலாது என்றால் சரிதான். அதனால் அந்த தடத்தை அகலப்படுத்த வாதிகளின் தந்தை 1ம் பிரதிவாதியின் தந்தையிடம் வாய்மொழி ஒப்பந்தம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல.

6) 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரியும் வா.சா.ஆ 1 பாக சாசனத்தை அனுசரித்து தங்களுக்குள் 2015 ல் ஒரு பாக சாசனம் ஏற்படுத்தி கொண்டனர் என்றால் சரிதான். அந்த

2015 பாக சாசனத்தில் நான் கிரையம் பெற்ற பூமிக்கு மேல்புறம் தென்வடலாகவும் வடபுறம் கிழமேலாகவும் 10 லிங்ஸ் அகல வண்டிதடம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7) நான் கிரையம் பெற்ற பூமிக்கு மேல்புறம் உள்ள தடத்திற்கும் மேல்புறம் உள்ள பூமியை மோனி என்பவர் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி மோனி மேற்படி தென்வடல் தடத்தை ஆக்கிரமித்தாக வாதிகள் அவர் மீது மாண்புமிகு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண் 77/2015 வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். அதே வழக்கில் கிழமேல் தடத்தை M.K. சுப்பிரமணியம் என்பவர் ஆக்கிரமித்தாக வாதிகள் அவரையும் கட்சி சேர்த்து உள்ளனர் என்றால் சரிதான். மேற்படி இருவர் ஆக்கிரமிப்பு செய்து இருப்பதால் வாதிகள் என் பூமியில் மேற்படி தடத்திற்கு தென்புறம் 20 அடி பாதை அமைத்து அதில் தான் 2015 முதல் சென்று வருகின்றனர் என்றால் சரியல்ல. அவர்கள் 10 லிங்ஸ் தடத்தை தான் பயன்படுத்துகின்றனர்.

8) நான் கிரையம் பெறும் போதே 10 லிங்ஸ் தடத்தை ஒட்டியுள்ள தென்னை மரங்கள் சுமார் 20 வருடங்களுக்கு மேல் வயதாகி இருந்தன என்றால் சரிதான். மேற்படி 10 லிங்ஸ் தடத்தை மேற்படி இருவர் ஆக்கிரமித்தால் தென்னை மரத்தை ஒட்டி 20 அடி தடத்தை வாய்மொழியாக பேசி அமைத்தனர் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் என் கணவரான 2 ம் பிரதிவாதிக்கு தெரிந்து இருந்ததால் தான் தன் பெயரில் கிரையம் பெறாமல் என் பெயரில் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. வாதிகள் தந்தைக்கும் 1ம் பிரதிவாதியின் தந்தைக்கும் இடையிலான வாய்மொழி ஒப்பந்தம் கிரையம் பெற்றவர் என்ற முறையில் என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல.

9) என் பி.வாசா.ஆ.1 கிரைய சாசன சொத்து விவரத்தை நான் படித்து உள்ளேன் என்றால் சரிதான். பி.வாசா.ஆ. 1 கிரைய சாசன சொத்து விவரத்தில் அருகில் இருக்கும் பூமி உரிமையாளர்கள் பெயர் குறிப்பிடாமல் பூமியின் புல எண்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வாசா.ஆ.1 கிரைய சாசன சொத்து விவரத்தில் அதன் தாய் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 10 லிங்ஸ் தடத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.வாசா.ஆ. 1 கிரைய சாசன சொத்து விவரத்தில் மாமூல் வழிநடைதட பாத்தியம் என மட்டும் குறிப்பிட்டு உள்ளோம் என்றால் சரிதான். வாதிகளின் உரிமையை முறியடிக்க நானும் , 1ம் பிரதிவாதியும் தவறான விவரங்கள் கண்டு பி.வா.சா.ஆ.1 கிரைய சாசனம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பி.வாசா.ஆ.1 கிரைய சாசனத்தில் முன் வில்லங்கங்களை நீக்கி தருவதாக எழுதி கொடுத்து உள்ளார் என்றால் சரிதான். வாதிகளின் தட உரிமை தெரிந்து நான் கிரையம் பெற்று உள்ளதால் அந்த தட உரிமை என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல.

10) எனக்கு கிரையம் கொடுத்த 1ம் பிரதிவாதி சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சாட்சியம் அளித்தால் மேற்படி வாய்மொழி ஒப்பந்தத்தை ஒப்புகொள்ள நேரிடும் என்பதால் தான் அவர் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரத்தை நான் கொடுக்க கடமைபட்டவர் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் பொய்யான எதிர்வழக்குரை தாக்கல் செய்து உள்ளதால் அது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம் /-(மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி